# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

# சட்ட பீடம்

## சட்டமாணித் தேர்வு, ஆண்டு – IV, 2020

## சட்டவியல்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

<u>நான்கு</u> (04) வினாக்களுக்கு <u>மட்டும்</u> விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. "Austin இனுடைய சமர்ப்பணத்தின் முறையிலும் விதத்திலும் பலரும் காண்கின்ற காதுக்கினிமையற்ற தகவுதரங்கள் எப்படியிருப்பினும், John Austin இனுடைய ஆக்கத்தின் வாயிலினூடாகவே ஆயிரக்கணக்கான மக்கள் பொதுச் சட்ட நாடுகளில் சட்டவியல் என்னும் உலகினுள் நுழைந்து ஆய்விடலுக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளனர் என்பதுடன் தொடர்ந்தும் அங்ஙனமே செய்தும் வருகின்றனர்.

   [W.L. Morrison, *John Austin* (London, Edward Arnold, 1982) 192.]

   மேற்போந்த கூற்றின் அடிப்படையில், John Austin இனால் செய்யப்பட்ட பங்களிப்பினையும் தற்கால சட்டக் கோட்பாடுகளின் மீதான அதனது செல்வாக்கினையும் சுருக்கமாக மதிப்பீடுசெய்க.

   (25 புள்ளிகள்)

2. சிக்கலான சட்ட முறைமையொன்றிலுள்ள சட்டங்களின் நிச்சயமற்ற தன்மை, தேக்கநிலை, மற்றும் வினைத்திறமின்மை தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு H.L.A. Hart, வெவ்வேறு வகையினதான விதிகளின் உதவியுடன், எங்ஙனம் முயற்சிக்கின்றார் என்பதை விளக்குக.

   (25 புள்ளிகள்)

3. புறநிலைக் கருத்துக்களால் களங்கப்படுத்தப்படாததான ஆனால் உயரிய கட்டுறு விதிகளினால் மட்டுமே வலுப்படுத்தப்படுவதான தூய்மையின் அடிப்படையிலமைந்த சட்டக் கோட்பாடொன்றினை கெல்சன் முன்வைக் கின்றார். எவ்வாறாயினும், குறிப்பிட்ட சட்ட முறைமையொன்றின் அதியுயரிய கட்டுறு விதியென்று வருகையில் தூய்மை என்ற கருத்துருவானது சவாலுக்குட்படுகின்றது.

தற்கால அரசியலமைப்பவழி ஜனநாயக அரசுகளுக்கு கெல்சனின் கோட்பாடானது எந்தளவுக்கு எற்புடையதாகும் என்று ஆராய்க. உமது விடையினை ஆகக் குறைந்தது இரண்டு உதாரணங்களினாலேனும் ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

4. **அ *அல்லது* ஆ** வுக்கு **மட்டும்** விடை தருக:

அ) COVID – 19 போன்ற பெருந்தொற்றுக்களைக் கட்டுப்படுத்துதல் அல்லது ஒழித்தல் என்பது சமூகத்தின் பொது நன்மைக்காக தனிநபர் உரிமைகளையும் உரித்துக்களையும் மட்டுப்படுத்துதலை உள்ளடக்கி யதாகும். இது, சமூகத்தினுடைய வெவ்வேறு பிரிவினரது போட்டியிடும் நலன்களைக் கருத்தில் கொள்கையில், சமநிலைப்படுத்தும் முயற்சியொன்று கொள்கை வகுப்பாளர்களினால் மேற்கொள்ளப்படு வதைத் தேவைப்படுத்துகின்றது. இந்த முயற்சியில், நீதிபதிகளது சமூகப் பிரக்ஞையும் முக்கிய பங்கொன்றினை வகிக்கும் எனலாம்.

மேற்போந்த கூற்றினை, சட்டவியலின் சமூகவியற் சிந்தனைப் பிரிவின் கண்ணோக்கில் நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

(25 புள்ளிகள்)

**அல்லது**

ஆ) நீதி பற்றிய Rawls இனுடைய கருத்தானது எல்லா மக்களுக்கும் சம உரிமைகள், சுதந்திரங்கள் மற்றும் வாய்ப்புக்களை உத்தரவாதப்படுத் துவதான நியாயமான சமூகமொன்றை ஸ்தாபிப்பதை இலக்காகக்

கொண்டுள்ளது எனலாம். ஆயினும், தனது கோட்பாட்டினை நடைமுறைக்கிடுவதில் Rawls முன்வைத்துள்ள பொறிமுறையின் நடைமுறைச் சாத்தியம் குறித்துச் சிலர் மிகவும் ஐயங் கொண்டுள்ளனர்.

நீர் உடன்படுகின்றீரா? ஆராய்க

(25 புள்ளிகள்)

5. நுண்ணாய்வு சட்டக் கோட்பாட்டின் பிரதான கருத்தமைவு யாதெனில், அறிவார்ந்த அடிப்படையிலமைந்ததான சட்டத்தின் உலகளாவிய அடித்தள மொன்றினைக் கண்டறிதலுக்கான சாத்தியப்பாட்டினை ஐயுறுதலாகும். . . . சட்டத்தின் மீதான நுண்ணாய்வுத் தாக்குதலின் முக்கியமான மூலகமாக அமைவது முடிந்த முடிபு என்ற மாயையேயாகும்.

நுண்ணாய்வுச் சட்டக் கற்கை இயக்கத்தின் பங்களிப்பினையும் மட்டுப்பாடு களையும் ஆராய்ந்து மேற்போந்த கருத்தினை ஆய்வு செய்க.

(25 புள்ளிகள்)

6. "கொள்கைசார் வாதங்களானவை . . . தீர்ப்பொன்றினை, சமூகமொன்றின் சில கூட்டு அடைவு இலக்கினை ஒட்டுமொத்தமாகவே அத்தீர்ப்பானது முன்னெடுக்கின்றது அல்லது பாதுகாக்கின்றது என்று காட்டுவதன் மூலமாக, நியாயப்படுத்துகின்றன. கோட்பாடுசார் வாதங்களானவை . . . தீர்ப் பொன்றினை, சில தனிநபர் அல்லது குழுக்களின் உரிமைகளை அத்தீர்ப்பானது மதிக்கின்றது அல்லது பெற்றுத்தருகின்றது என்று காட்டு வதன் மூலமாக நியாயப்படுத்துகின்றன."

[Ronald Dworkin, *Taking Rights Seriously* (Harvard University Press, 1978) 82.]

மேற்போந்த கூற்றின் பின்னணியில், Dworkin இனுடைய உரிமைகள் கோட்பாட்டின் மூலமாக நீர் என்ன விளங்கிக் கொள்கின்றீர் என்பதை உரியவாறான உதாரணங்களைப் பாவித்து ஆராய்க.

(25 புள்ளிகள்)

7. **அ** மற்றும் **ஆ** ஆகிய **<u>இரண்டுக்குமே</u>** விடை தருக:

அ). பின்நவீனத்துவம் என்பது அறிவியல்வாதத்தின் மீதான நம்பிக்கையின் நிராகரிப்பு என்பதுடன் எந்த வாதமுமே, அது எத்துணையளவு முற்றுமுழுதாகத் தர்க்கரீதியில் அமைந்ததாயினும் அவ்வாதந் தொடர்பான முன்னூகிப்புக்களே என அங்கீகரித்தல் என்பதுமாகும். அவர்களது அறிவியல்வாத நிராகரிப்புடன் சேர்ந்து வருவது உண்மை என்பதன் சாத்தியத்துக்கான நிராகரிப்புமாகும்.

தற்கால சமூகங்களில் நீதியின் பலாபலன்களைச் சுவைப்பதில் விளிம்புநிலைக் குழுக்களினுடைய பரிதாப நிலையினை மேற்போந்த கூற்றானது எந்தளவுக்குப் பிரதிபலிக்கின்றது எனக் கருத்துரைக்க. உமது ஆராய்வு நோக்கத்துக்காக, இலங்கைச் சமூகத்தினையும் நீர் தொடர்புறுத்திக் கூறலாம்.

(12.5 புள்ளிகள்)

ஆ) பெண்ணியச் சட்டக் கோட்பாட்டிலுள்ள பிரச்சனை யாதெனில், அவசியமான சட்டச் சீர்திருத்தங்களை குறிப்பிட்டதொரு சட்ட முறைமையில் செய்யக் கூடிய அளவுக்குக் கவனத்தில் கொள்ளப்படுவதற்கான ஒரேயோரு கோட்பாடென்று ஒன்று கிடையாது என்பதேயாகும்.

இலங்கையில் எந்தளவுக்கு இதுவே நிலைமையாக உள்ளதென ஆராய்க. உமது விருப்பத் தெரிவிலான பெண்ணியச் சட்டச் சிந்தனைப் பிரிவின் விசாரங்களைப் போக்குவதற்காக எவ்வகையினதான சட்டச் சீர்திருத்தம் அவசியமாகத் தேவைப்படுகின்றது?

(12.5 புள்ளிகள்)

********